1989 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைகளுக்கு நான் பதில் அளிக்கும் பொழுது, இது திடீரென்று உடனடியாகப் பதில் அளிக்கக்கூடிய அளவில் உள்ள பிரச்சினை இல்லை; விவரங்களை ஆராய்ந்து நாளைக்கு பதில் சொல்வதாக கூறி இருக்கின்றேன். எழுப்பிய பிரச்சினைக்கு நாளைய தினம் விவரமாக நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், பதில் சொல்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த திரு. குமரி அனந்தன் அவர்களும், திருமதி பொன்னம்மாள் அவர்களும், போடி கலவரம் தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானங் களைக் கொடுத்தார்கள். அவர்களுக்கு எழுத்து வடிவிலான விடை ஏற்கெனவே தரப்பட்டிருக்கிறது. பொதுவாகவே, ஒரு பிரச்சினை குறித்து, அவர்கள் குறிப்பிடுவது போல, அது Judicial Enquiry என்று எடுத்துக் கொண்டாலும் சரி, Commission of Inquiry என்று எடுத்துக் கொண்டாலும் சரி இரண்டு நிலையிலும், நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான நீதிபதி அமர்த்தப்பட்ட பிறகு, அது தொடர்பான விவரங்கள் அந்தக் கமிஷனிலே மட்டும்தான் சொல்லப்பட வேண்டுமே தவிர, அந்த நீதி விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அளவிற்கு நாம் விவாதங்களை வளர்க்கக் கூடாது என்ற அடிப்படையில் தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மறுக்கப்பட்டிருக் கின்றன என்ற அடிப்படையிலும், நாளைக்கு முதலமைச்சரவர்கள் இதற்கு விடை சொல்வார்கள் என்ற அடிப்படையிலும் இந்தப் பிரச்சினைக்கு இதோடு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர்கள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதம்

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே தலைமையாசிரியர்கள் சி.இ.ஓ. அலுவலகம் முன்னால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக் கிறது. அதற்குக் காரணம், 74-லே கலைஞர் அவர்கள் முதலமைச் சராக இருந்த காலத்திலே எங்களுடைய மாவட்டத்திலேயிருந்து

[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 அக்டோபர் 31

எந்தவொரு ஹெட்மாஸ்டரும் வெளி மாவட்டத்திற்கு, செங்கல் பட்டுக்கோ, சவுத் ஆற்காட்டுக்கோ வந்தால், திருப்பி கன்னியா குமரி மாவட்டத்திற்கு ரொட்டேஷன்படி, சீனியாரிட்டிபடிதான் வர வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; 74, 75-லே ஜி.ஓ. இருக்கிறது. அதைத் தொடர்ந்து முந்தைய அரசும் கடைப்பிடித்தது.

இப்பொழுது பல ஆண்டு காலமாக சுமார் 40 தலைமையாசிரி யர்கள் சவுத் ஆற்காட், நார்த் ஆற்காட், செங்கல்பட்டு மாவட்டங் களிலே இருக்கிறார்கள். அவ்விதம் இருக்க, 88, 89-லே புர மோஷன் ஆன பத்து தலைமையாசிரியர்களைக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். இதைப் பல முறை அரசினுடைய கவனத்திற்குச் சங்கம் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கிணங்க ஆறு பேர்களைத் திருப்பி டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள்.

இன்னும் பத்து தலைமையாசிரியர்கள், வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே, 88-லே புரமோஷன் ஆனவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனு டைய ரிக்கார்டு என்னிடம் இருக்கிறது. ஆகையினால் நம்முடைய முதலமைச்சரவர்கள் 74-லே போட்ட ஆணையை வலியுறுத்தித் தான் கேட்கிறேனே தவிர, புதிதாக நாங்கள் ஒன்றும் சொல்லத் தயாராக இல்லை. இந்தப் பத்து தலைமையாசிரியர்களையும் நீங்கள் திருப்பி வெளி மாவட்டத்திற்கு டிரான்ஸ்பர் செய்து விட்டு, ஸ்ட்ரிக்ட் சீனியாரிட்டிபடி வெளி மாவட்டங்களில் இருக் கின்றவர்களைக் குமரி மாவட்டத்திற்குக் கொண்டு வந்தால் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார்கள். இல்லையென்று சொன்னால் அந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே போகும். ஆகையினால் தயவுசெய்து அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்து, ஜூனியராக இருக்கின்ற குமரி மாவட்டத்தில் வேலை செய்கின்ற தலைமையாசிரியர்களை மீண்டும் வெளி மாவட்டத் திற்கு—அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பிரச்சினை இல்லை—மாற்றி விட்டு ஸ்ட்ரிக்ட் சீனியாரிட்டிபடி 1974-லே இருந்து 1989 வரை உள்ள ஸ்ட்ரிக்ட் சீனியாரிட்டியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள் கிறேன்.

1989 அக்டோபர் 31] [திரு. மா. சுந்தரதாஸ்

அதைப்போன்று ஆசிரியர்கள்-காண்ட்ராக்ட் பேஸிஸிலே நியமனம் செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்கள் இன்று பட்டினிப் போர் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் நீங்கள் திருப்பி கன்சிடர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக மற்ற மாவட்டங்களிலே உள்ள ஆசிரியர்களைவிட அதிக அளவிற்கு இடம் பெற்றிருக்கிறார்கள். அதிக அளவிலே இடம் பெற்றிருக்கின்ற காரணத்தால் அவர்கள் திரும்ப கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று வேண்டுகோளைத் தருகின்ற பொழுது, அது ஒரு சிறிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், அவர்களிலே சீனியாரிட்டி அடிப்படையில் அவர்களை அந்த மாவட்டத்திற்குத் திருப்பி அனுப்ப, மறுபடியும் இடம் பெறச் செய்ய ஏற்கனவே வழி வகுக்கப்பட்டது. ஆனால் அந்த முன்னுரிமை என்பது வெறும் சீனியாரிட்டியாக இருக்க முடியாத நிர்வாக நிலைமையும் இருக்கிறது. ஏனென்றால் சில பள்ளிக்கூடங்களில் மூத்த ஆசிரியர்கள் அந்தப் பள்ளிக்கூட நிர்வாகத்திற்குத் தேவைப்படுகிறார்கள். கல்வி நிலையைக் கருதுகிற பொழுது, நல்ல பயிற்சி பெற்ற நீண்டகாலம் ஆசிரியராக இருந்த திறமை வாய்ந்தவர்கள் பள்ளி நிர்வாகத்திற்குத் தேவைப்படுகின்ற நிலைமையும் பலவிடங்களிலே இருக்கிறது.

கணவன், மனைவி என்ற முறையில், அந்த மாவட்டத்தில் மனைவி வேலை செய்கிறார், ஆகவே, எனக்கு அந்த மாவட்டத்தில் இடம் தர வேண்டுமென்று கேட்கிற முன்னுரிமை வேண்டுகோளும் இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், நிர்வாக முறை பற்றியும் சில காரியங்களை அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நடத்தவேண்டியுள்ளது.

இது ஆசிரியர்களுக்கு எதிரான காரியம் அல்ல. நிர்வாக முறைப்பட்ட காரியம். அவர்களிலே யாருக்காவது குறையிருக்குமானால், அந்தக் குறையை அந்தத் துறை கவனித்து, அந்தக்

குறையைப் போக்க என்றைக்கும் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி மாற்றுவதில் இப்போது ஜுலை மாதம், ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற மாறுதல்களைத் தொடர்ந்து அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடத்தாததற்குக் காரணம், ஏதாவது குறையிருந்தாலும்கூட மறுபடியும் ஏப்ரல் திங்களுக்குப் பிறகு மாற்றினால்தான் அந்த ஆசிரியர்களுடைய பிள்ளைகள், படிக்கிற பள்ளிக்கூடங்களிலிருந்து வேறு மாவட்டங்களில் சேர்ப்பதில் தொல்லையில்லாமல் இருக்கும் என்பதாகும். அரசாங்க நிர்வாகத்திலே இந்த இடைக் காலத்தில் இயல்பாக ஒரு இடம் காலியாக இருந்தால்தான் மாற்றலாமென்ற கருத்து அரசின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சிக்கல்கள் இருக்கிற காரணத்தால் சில தவறுகள் இருக்கலாம், சில குறைகள் இருக்கலாம். குறைகளைப் போக்க கல்வித் துறையின் மூலமாக, துறை நிர்வாக வசதிகளுக்கேற்ப நிச்சயமாக முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, எதற்கெடுத்தாலும் உண்ணாவிரதம் என்றால்—நிர்வாக முறையில் நடக்கிற சாதாரண காரியங்களுக்கே உண்ணாவிரதம் என்றால்—சுதந்திரப் போராட்டத்திற்கு உண்ணாவிரதம் என்றால்—நானும் கூடச் சேர்ந்து கொள்வேன். ஆனால் நிர்வாகச் சிக்கல்களுக்கு உண்ணாவிரதம் என்றால் அது உள்ளபடியே ஒரு கசப்புணர்ச்சியை வளர்க்கத்தான் பயன்படும் என்ற காரணத்தால் அது தேவையில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று ஒப்பந்த ஆசிரியர்களைப் பற்றியது. எந்தெந்த கல்லூரியில் எந்தப் பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லையென்ற காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் ஏற்கெனவே நியமிக்கப் பட்டார்களோ, மறுபடியும் அவர்களுக்கு, அவர்களுக்கிடையே யார் முன்னுரிமை பெற்றவர்களோ, அந்த சீனியாரிட்டி அடிப்படையில், எந்த இடத்தில் அந்தப் பாடம் நடத்துவதற்கு ஆசிரியர்கள் தேவையோ அங்கே அவர்கள் நியமிக்கப்படுவதற்கு ஏற்கெனவே உறுதி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் போதுமான இடங்கள் இல்லாத காரணத்தால், எந்தப் பாடத்திற்கு ஆசிரியர்கள் தேவையோ அந்தப் பாடத்திற்குரிய ஆசிரியர்களாக அவர்கள் இல்லாத காரணத்தால் பலபேருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை உடனடியாக இல்லை. அவர்களுடைய

1989 அக்டோபர் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

முன்னுரிமை அந்தத் துறையினரால் மதிக்கப்பட்டு, ஏற்று செயல் படுத்தப்படும் என்பதை நான் மறுபடியும் தெரிவித்துக்கொள்கி றேன். எனவே, இதற்காக போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஆசிரியர்களுக்கு இல்லை. இந்த அரசு ஆசிரியர்களை ஆதரிக்கிற அரசே தவிர, வெறுக்கிற அரசு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கலவரங்கள் குறித்த நீதி விசாரணை—தொடர்ச்சி.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப் பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களும், திரு. குமரி அனந்தன் அவர்களும், திரு. வீரையன் அவர்களும் பாஸ்கரன் கமிஷனை குறித்த சில விளக்கங்களைக் கோரினார்கள். நாளையதினம் அதுகுறித்து விளக்கம் அளிப்பதாகச் சொல்லியிருந்தேன். இப்போது என்னுடைய அலுவலகத்திலேயிருந்து வந்துள்ள விளக்கங்களை இன்றைக்கே தெரிவித்து விடலாம் என்று கருது கிறேன். இந்த விசாரணைக் குழுவிற்கு

Terms of Reference :

(1) To enquire into and report the cause and circumstances leading to riots and other disturbances of law and order in various places in Madurai district in September, 1989 ;

(2) To enquire into and report whether the various instances of Police firing are justified ;

(3) To enquire into and report whether minimum force was used by the Police ;

(4) To enquire into and report whether all the prescribed formalities were observed before opening of fire ;

(5) To recommend suitable measures to prevent such occurrences in future ;

(6) To suggest whether action against any Government Official is necessary.

இந்த Terms of Reference -உடன் Within a period of three months from the date of publication of this Notification. அதாவது மூன்று மாதத்திற்குள் இந்த விசாரணை முடிவடைய